**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 27.07.2026** **நேரம் : மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

நீட் உள்ளிட்ட தேர்வுகளில், வினாத்தாள் கசிவு, மற்றும், இதர முறைகேடுகளை தவிர்ப்பதற்கான பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா, மக்களைவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள பளு தூக்கும் வீரர் ராஜா முத்துபாண்டிக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், காரைக்கால் பட்டினச்சேரியில், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை, பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

புதுச்சேரியில், பாய்மரப் படகு மூலமான என்சிசி மாணவர்களின் கடல்சாகச பயணத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

------------------------

மசோதா 1 (18)

நீட் உள்ளிட்ட தேர்வுகளில், வினாத்தாள் கசிவு, மற்றும், இதர முறைகேடுகளை தவிர்ப்பதற்கான பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா, மக்களைவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர், நண்பகல் 12 மணிக்கு அவையின் அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, மத்திய பணியாளர் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இம்மசோதாவை அவையில் தாக்கல் செய்தார். நீட் விவகாரம் தொடர்பான மாணவர் போராட்டத்தின் போது, போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் என கோரி, எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே,

மசோதா தாக்கல் செய்யப்பட்டது. தேர்வு சீர்திருத்தங்களுக்கான முதல்படிதான் பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா என்று சபாநாயகர் திரு. ஓம் பிர்லா கூறினார். முக்கியமான இம்மசோதா மீது, விரிவான விவாதங்களுக்கு தேவை இருப்பதாகவும், இத்தகைய விவாதங்களில்தான், அவையின் உணர்வுகளையும், நாட்டின் உணர்வுகளையும் பிரதிபலிக்க முடியும் என்பதால், எதிர்கட்சிகள் விவாதங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். அதன் பின்னரும் அமளி அடங்காத நிலையில், அவையின் அலுவல்கள் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன. 2

மசோதா 2 (12)

மணிக்கு அவையின் அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ அவையில் பேசுகையில், பொதுத் தேர்வுகள் மசோதாவில், மொத்தம் 91 திருத்தங்களை கொண்டு வர, உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத்து இருப்பதாகவும், இதை வைத்துப் பார்த்தாலே, திருத்த மசோதா எவ்வளவு முக்கியமான என்பதை புரிந்து கொள்ளலாம் என்றும், கூறினார். மசோதா மீதான விவாதங்களுக்கு 6 மணி நேரம் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், தேவைப்பட்டால், அவையின் உணர்வுகளுக்கு ஏற்ப, நேரத்தை நீட்டித்துக் கொள்ளலாம் என்றும், சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார். அதன்பின்னரும் அவையில் அமளி நீடித்ததால், மக்களவையின் அலுவல்கள் மாலை 5 மணி வரையிலும், பின்னர் நாளைக் காலை 11 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன.

மசோதா 3 (4)

மாநிலங்களவையிலும் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, அலுவல்கள் முதலில், 4 முறையும், பின்னர், நாளைக் காலை 11 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன. இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா குறித்து ஒரு செய்தி தொகுப்பு……

மசோதா 4 (15)

2024ஆம் ஆண்டு, பொதுத் தேர்வுகள் சட்டத்தை திருத்தும் வகையிலான புதிய மசோதாவில், வினாத்தாள் கசிவு, மற்றும், இதர முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு, 10 ஆண்டு சிறை தண்டனை, மற்றும், 10 கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்க வகை செய்யப் பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்குகளை அன்றாட அடிப்படையில், விரைந்து விசாரித்து தீர்ப்பளிக்க ஏதுவாக, அனைத்து மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களிலும், சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப் படுவதை கட்டாயமாக்கும் வகையில், புதிய விதிமுறைகள் மசோதாவில் இடம்பெற்றுள்ளன. தேர்வு முறைகேடுகள் தொடர்பான காவல் துறையின் புலன் விசாரணைகளை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டதில் இருந்து, 2 மாதங்களுக்கு உள்ளாகவும், நீதிமன்ற விசாரணைகளை, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து, 3 மாதங்களுக்கு உள்ளாகவும், பூர்த்தி செய்ய வேண்டும் என, மசோதாவில் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வுகள், மற்றும், ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு நடைமுறைகளில், நேர்மை, மற்றும்,

*மசோதா 5 (5)*

வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம், இத்தகைய தேர்வுகள் குறித்த மக்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும், மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில், வலுவான சட்ட கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், புதிய மசோதா உதவிகரமாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*நீதிமன்றம் (11)*

டெல்லி மாணவர் போராட்டத்தின் போது, காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது குறித்த மனுக்களை நாளை விசாரிக்க, உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. காவல் துறையினர் தாக்கப்பட்டதாக அவர்களின் குடும்பத்தினர் தாக்கல் செய்துள்ள மனுக்களையும் விசாரிக்க, நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. விதிகளுக்கு உட்பட்டு அமைதியான முறையில் போராட, அரசியல் சாசனத்தில் மக்களுக்கு உரிமை இருப்பதாக, இன்று, தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் கூறினார். நீட் விவகாரம் தொடர்பான மற்றொரு மனு மீது இன்று நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, திரு. நந்தன் நீலேகனி தலைமையில், மத்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர், இம்மனு குறித்து முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தது.

------------------------

*பதக்கம்-பாராட்டு (8)*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் 65 கிலோ எடைப் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்திய பளு தூக்கும் வீரர் ராஜா முத்துபாண்டிக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் திரு. விஜய் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். முத்து பாண்டியின் வெற்றி, நாட்டிற்கு பெருமை ஈட்டி தந்து இருப்பதாக இவர்கள் பாராட்டியுள்ளனர். தமிழக அரசின் சார்பில், முத்து பாண்டிக்கு 30 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

------------------------

*கைலாஷ்நாதன்* 1 (5)

ஒருநாள் பயணமாக இன்று காரைக்கால் சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், பட்டினச்சேரி மீனவ கிராமத்தில், புதிதாக கட்டப்பட்டுள்ள ஒன்றரை லட்சம் லிட்டர்மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை, பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். துணை நிலை ஆளுநரின் காரைக்கால் பயணம் குறித்து ஒரு தொகுப்பு......

*கைலாஷ்நாதன்* 2 (17)

துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், காரைக்கால் பட்டினச்சேரி மற்றும் கருகளாச்சேரியில், அறுவடை செய்யப்பட்ட கடல் பாசியை, வியாபாரிகளிடம் ஒப்படைத்து, விற்பனை வருவாயை மீனவப் பெண்களிடம் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் திரு. ஜிஎன்எஸ் ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மீனாட்சு சுந்தரம், திரு.விக்னேஷ்வரன், மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி, மற்றும், உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். காரைக்காலில், மத்திய கடல் மீன்வள நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட மீனவப் பெண்கள், ஏற்கனவே 2 முறை கடல்பாசி வளர்த்து அறுவடை செய்துள்ள நிலையில், தற்போது 3ஆவது முறையாக கடல் பரப்பில் 16 தெப்பங்களில் வளர்க்கப்பட்ட கடல்பாசியை அறுவடை செய்துள்ளனர். காரைக்காலில், அனைத்து மீனவ கிராமங்களுக்கும், கடல்பாசி வளர்ப்பை விஸ்தரிக்க, மீன்வளத் துறை தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. முன்னதாக துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் காரைக்காலில், தருமபுர ஆதீனம் சார்பில், ஒருங்கிணைந்த, பாரம்பரிய சுகாதார மையம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, கோசாலை, ஐஏஎஸ் பயிற்சி மையம், வேத பாடசாலை,

கைலாஷ்நாதன் 3 (4)

மற்றும், மலிவு விலை உணவகத்தையும் அவர் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அமைச்சர் திரு.ராஜசேகர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், தருமபுர ஆதீனம் 27ஆவது மகா சன்னிதானம் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

------------------------

புதுச்சேரி என்சிசி (12)

புதுச்சேரியில், பாய்மரப் படகு மூலம் தேசிய மாணவர் படையினர் மேற்கொள்ளும் **கடலுக்கு போவோம் - ஸ்வர்ணம் 2026** கடல்சாகச பயணத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, தேங்காய்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து, கொடியசைத்து தொடக்கி வைத்தார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் என்கிற மொட்டையப்பன், என்சிசி குரூப் கமாண்டர் திரு. ஆஷிஷ் திவாரி உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இன்று தொடங்கி உள்ள இந்த கடல்சார் பயணம், வரும் செப்டம்பர் 27ஆம் தேதி வரை, மொத்தம் 63 நாள் நடைபெற உள்ளது. புதுச்சேரி, கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமேஸ்வரம், சென்னை உட்பட, கிழக்கு கடற்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்த 800 கிலோ மீட்டர் பயணத்தில், நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 என்சிசி மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

------------------------

குலோத்துங்கன் (12)

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் இன்று, சுத்துக்கேணி பகுதியில், அரசுப் பள்ளி, மற்றும், அரசு அலுவலகங்களில் நேரடி ஆய்வு மேற்கொண்டார். அரசு உயர்நிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதை அவர் ஆராய்ந்தார். மாணவர்களுக்கன கழிப்பறைகளை அவர் பார்வையிட்டு, சுத்தமாக பராமரிக்க அறிவுறுத்தினார். மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து மாணவர்களிடையே கலந்துரையாடிய திரு. குலோத்துங்கன், படிப்பில் மட்டுமின்றி, விளையாட்டிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். வாழ்க்கையில் முன்னேற, ஒழுக்கம் மிக அவசியம் என்றும் அவர் கூறினார். பள்ளிகளில் மாதம் ஒருமுறை, பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகளை நடத்த வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

------------------------

வானிலை (12)

தமிழக கடலோர பகுதிகளில், கீழ்மட்ட வளிமண்டலத்தில், பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று வடகடலோர தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆகஸ்ட் 2ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------

புதுச்சேரி வேளாண் துறை (9)

புதுச்சேரியில் இவ்வாண்டு தைப் பட்டத்தில், நாட்டு காய்கறிகளை பயிரிட்ட விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய், அறுவடைக்கு பிந்தைய மானியமும், தரமான விதைகளை வாங்க, 50 சதவிகித பின்செய் மானியமும் வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பித்த விவசாயிகளின் பெயர்ப் பட்டியல், சமுதாய தணிக்கைக்காக, சம்பந்தப்பட்ட உழவர் உதவியகங்களின் அறிவிப்புப் பலகையில், விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. இப்பட்டியல் தொடர்பாக ஆட்சேபணை உள்ளவர்கள், ஆகஸ்ட் 3ஆம் தேதிக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்று தோட்டக் கலை துறை அறிவித்துள்ளது.

------------------------

சிஆர்பிஃஎப் (10)

இன்று சிஆர்பிஃஎப் நிறுவன நாளை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆகியோர், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். உள்நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரின் தன்னிகரற்ற வீரத்தையும், அலப்பரிய சேவைகளையும் இவர்கள் பாராட்டி உள்ளனர். தீவிரவாதத்தை வேராடு கலைந்து, நாட்டில் அமைதி, மற்றும், முன்னேற்றத்தை ஒருங்கே நிலை நாட்டுவதில், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரின் துணிச்சல், மற்றும், அர்ப்பணிப்பு உணர்வை போற்றுவதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

------------------------

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

நீட் உள்ளிட்ட தேர்வுகளில், வினாத்தாள் கசிவு, மற்றும், இதர முறைகேடுகளை தவிர்ப்பதற்கான **பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா**, மக்களைவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள பளு தூக்கும் வீரர் **ராஜா முத்துபாண்டி**க்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், காரைக்கால் பட்டினச்சேரியில், புதிய **மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**யை, பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

புதுச்சேரியில், பாய்மரப் படகு மூலமான என்சிசி மாணவர்களின் **கடல்சாகச பயணத்**தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, கொடியசைத்து தொடக்கி வைத்தார்.